# தமிழ் நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044- 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை- 600 032.
முன்னிலை : முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ)
*******

முறையீட்டு மனு எண். 792/2016

ஆணை எண். 26 /2017

நாள் : 13 /03/2017

**திரு. எஸ். கேசவன்,**
**மதுரை– 16.** **– முறையீட்டு மனுதாரர்**

**திரு. செ. அரசு,**
**செயற் பொறியாளர்,**
**மதுரை மாநகராட்சி, மதுரை – 625 002..**

**– எதிர் மனுதாரர்**

மதுரை மாநகராட்சி, 17–வது வார்டு, S.S. காலனி, அம்பேத்கர் நகர், இராஜீவ் காந்தி நகர் பகுதியில் வசிக்கும் திரு எஸ். கேசவன் அவர்களது 29.07.2016 நாளிட்ட முறையீட்டு மனு இம்முறைமன்ற நடுவத்தில் 05.08.2016 அன்று பெறப்பட்டு 792/2016 எண்ணிட்ட முறையீட்டு மனுவாகப் பதிவு செய்யப்பட்டது. மேற்குறிப்பிட்ட முறையீட்டு மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்காணும் ஆணை வெளியிடப்படுகிறது :–

**<u>ஆணை</u>**

மதுரை மாநகராட்சி, 17–வது வார்டு S.S. காலனி, அம்பேத்கர் நகர், இராஜீவ் காந்தி நகர் பகுதியில் வசிக்கும் திரு எஸ். கேசவன் என்பவர் தான் வசிக்கும் பகுதியில் மக்கள் மழைக்காலங்களில் சேரும், சகதியும் நிறைந்த வாழ்க்கை மற்றும் கொசுக்களுடன் நோய் வர சாபம் பெற்று வாழ்கின்றனர் என்றும் தனது பகுதிக்கு அடிப்படை வசதிகள் மற்றும் பாதாள சாக்கடை இணைப்பு கோரி மதுரை மாநகராட்சிக்கு விண்ணப்பித்ததாகவும் அது குறித்து தன்னை அதிகாரிகள் சந்தித்து குறைகளை கேட்டறியவில்லை என ஆதங்கப்பட்டுள்ளார். இது சம்பந்தமாக செயற்பொறியாளர் தன்னை மிரட்டுவதாகவும் முறையிட்டுள்ளார்.

2. மனுதாரரிடம் 02.09.2016 அன்று விசாரணை மேற்கொள்ளப்பட்டு வாக்குமூலம் பெறப்பட்டது. விசாரணையின்போது தனது பகுதியில் ரூ.26,75,000/– மதிப்பீட்டில் ஐ,ஐ,எப். திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்படவுள்ள சாலை மற்றும் பாதாள சாக்கடை திட்டப் பணிகளை விரைந்து முடிக்க ஆவண செய்யுமாறு கேட்டுக்கொண்டார். மேலும் சட்டத்துக்குப் புறம்பாக வீட்டில் உள்ள கழிவு நீர் குழாயை, தெருவில் உள்ள கழிவு நீர் பிரதானப் பகுதியோடு இணைக்கப்பட்டதைக் காட்டும் புகைப்படங்களை சமர்ப்பித்தார். பாரதி நகர் பகுதியில் சுமார் 30–க்கும் மேற்பட்ட நபர்கள் வரி எதுவும் செலுத்தாமல் பாதாளச் சாக்கடை இணைப்பு செய்துள்ளனர் என்றும் அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கக்கோரியும் முறையிட்டுள்ளார்.

3. முறையீட்டு மனுதாரரிடம் விசாரணை மேற்கொண்டபின்பு, எதிர்மனுதாரான செயற்பொறியாளர் திரு செ. அரசு அவர்களிடம் 20.09.2016 அன்று விசாரணை மேற்கொள்ளப்பட்டு வாக்குமூலம் பெறப்பட்டது. முறையீட்டு மனுதாரர் வசிக்கும் பகுதி, சட்டத்திற்குப் புறம்பாக ஆக்கிரமிப்பு செய்யப்பட்ட பகுதி என்றும், சட்டமன்ற உறுப்பினர் நிதியிலிருந்து சாலை வசதி செய்து தரப்பட்டுள்ளது என்றும் தெரிவித்தார். மாநகராட்சி வழிகாட்டி நெறிமுறைகளின்படி, சொத்துவரி விதிக்கப்பட்டால் மட்டுமே பாதாளச் சாக்கடை இணைப்பு மற்றும் குடிநீர் இணைப்பு தர இயலும் என்று குறிப்பிட்டார். எனினும், இப்பகுதியில் பொது குடிநீர் குழாய் மற்றும் ஆழ்துளை கிணறு மூலம் தண்ணீர் வசதி செய்து தரப்பட்டுள்ளது என்றும் தெரிவித்தார். மேலும், பொதுமக்களின் ஒத்துழைப்போடு 17 குடும்பங்களுக்கு தனிக் கழிப்பறை (IHHL) செய்து தரப்பட்டுள்ளதையும் விசாரணையின்போது தெரிவித்தார். பாரதிநகர் பகுதியில் சொத்துவரி விதிக்காமல் கழிவுநீர் இணைப்பு பெற்றுள்ள நபர்கள் பற்றிய விவரங்களை கண்டறிந்து அறிக்கை அனுப்புவதாக தெரிவித்ததுடன், 32 நபர்கள் முறைகேடாக கழிவுநீர் இணைப்பை மேற்கொண்டதை முறைபடுத்தும் பொருட்டு மதுரை மாநகராட்சி விதிஎண்.204(1)ன் கீழ் அறிவிக்கை செய்து அதன் நகல்களையும் சமர்ப்பித்துள்ளார்.

4. முறையீட்டு மனுதாரர் மற்றும் செயற்பொறியாளர் திரு செ. அரசு ஆகியோரிடம் இம்முறைமன்ற நடுவத்தில் விசாரணை மேற்கொள்ளப்பட்ட பின்பு, 08.11.2016 அன்று முறையீட்டு மனுதாரரிடம் அவரது கோரிக்கைக் குறித்து மதுரை மாநகராட்சி துணை ஆணையரும் விசாரணை மேற்கொண்டுள்ளார். விசாரணையின்போது மனுதாரர் வசிக்கும் பகுதியில் குடியிருப்புதாரர்களுக்கு பட்டா வழங்கப்படவில்லை என்றும், பட்டா பெற்று விண்ணப்பித்தால் சொத்துவரி விதிக்கப்பட்டு குடிநீர் மற்றும் கழிவுநீர் இணைப்பு வழங்கப்படும் என மனுதாரருக்குத் தெரிவிக்கப்பட்டுள்ளது. மனுதாரர் 29 வயது நிரம்பிய இளைஞர் தனது பகுதியில் அடிப்படை வசதிகள் வேண்டும் என பொது நோக்குடன் செயல்பட்டு வருகிறார். எனினும் அப்பகுதியில் வசிக்கும் குடியிருப்புதாரர்களுக்கு முறையான பட்டா ஆவணம் இல்லை எனத் தெரிகிறது. குடியிருப்புதாரர்கள் தாங்கள் குடியிருக்கும் மனைகளுக்கு பட்டா ஆவணம் சமர்ப்பித்து சொத்து வரி விதிப்பு செய்து கொண்டால் குடிநீர் மற்றும் கழிவு நீர் இணைப்பு பெறுவதற்கு எந்தவிதத் தடங்கலும் இருக்காது. மேலும், மனுதாரர் பாரதி நகரில் முறைகேடாக கழிவுநீர் இணைப்புகள் பெற்றதை சுட்டிக்காட்டிய பின்புதான் மாநகராட்சியும் உரிய நடவடிக்கையை மேற்கொண்டுள்ளது. எனவே, இதுபோன்ற நேர்வுகளில் மாநகராட்சி அலுவலர்கள் மெத்தனமாக செயல்படாமல் விழிப்புடன் பணியாற்றவேண்டும் என இம்முறைமன்ற நடுவம் அறிவுறுத்துகிறது. மேலும், பொதுமக்கள் சார்பாக முறையீடுகளை தெரிவிக்கும் நபர்களிடம் பரிவுடன் நடந்து கொள்வதுடன், உரிய வழிகாட்டுதல்களுடன்

அவர்களது குறைகளைக் களைய மாநகராட்சி அலுவலர்கள் முற்பட வேண்டும் எனவும், பாரதி நகரில் முறைகேடான கழிவு நீர் இணைப்புகளை முறைப்படுத்துவதற்கு மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைக் குறித்த முடிவான அறிக்கையினை இவ்வாணை பெற்ற 2 மாத கால அவகாசத்திற்குள் இம்முறைமன்ற நடுவத்திற்கு அனுப்பும்படியும் அறிவுறுத்தி ஆணையிடுகிறது.

**2017** ஆம் ஆண்டு **மார்ச்** திங்கள் **13–**ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையிட்டு இவ்வாணையிடப்படுகிறது.

--//ஒப்பம்//--
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

செயலாளர்.

பெறுநர்

**திரு. எஸ். கேசவன்,**
**எண். 1. இராஜீவ்காந்தி நகர்,**
**அம்பேத்கர் நகர் குடியிருப்பு பகுதி,**
**17–வது வார்டு, எஸ்.எஸ். காலனி,**
**மதுரை மாநகராட்சி,**
**மதுரை – 625 016**

**ஆணையர்,**
**மதுரை மாநகராட்சி,**
**தல்லா குளம்,**
**மதுரை – 625 002.**

**திரு செ. அரசு,**
**செயற்பொறியாளர்,**
**மதுரை மாநகராட்சி,**
**மதுரை – 625 002.**

**முறைமன்ற நடுவரின் நேர்முக எழுத்தர்,**
**பேரூராட்சி பிரிவு –3,**
**இ.கோ. / உதிரி**